RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2311

# இந்து சமுதாய மறுமலர்ச்சியில் ஆர்.எஸ். சுப்புலட்சுமியின் பங்களிப்பு: 19ஆம், 20ஆம் நூற்றாண்டின் தமிழகப் பெண்களின் கல்வி நிலையை மையப்படுத்திய சிறப்பாய்வு

வ. குணபாலசிங்கம் [அ, *], த. பாஸ்கரன் [அ], மும்தாஜ் சமீம் [அ]

[அ] இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[ஆ] சிரேஸ்ட உதவிப் பதிவாளர், கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[இ] பிரதிப் பதிவாளர், பொதுச் சேவைகள் பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# Sister R.S. Subbalakshmi's Role in the Renaissance of Hindu Community : A special study based on the Educational standard of Tamil Nadu women in 19th and 20th Centuries

V. Gunapalasingam [a,*], T. Baskaran [b], M.S.J. Mumthaj Sameem [c]

[a] Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
[b] Senior Assistant Registrar, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
[c] Deputy Registrar, General Service Division, Eastern University, Sri Lanka
*Corresponding author Email: gunapalasingamv@esn.ac.lk

DOI: https://doi.org/10.54392/ijot2311
Received: 14-11-2022; Revised: 21-01-2023; Accepted: 30-01-2023; Published: 09-02-2023

**Abstract:** The rise and fall of Hindu Community in India is a historical phenomenon. There are various personalities who dedicated themselves to the renaissance of them, regardless of victory or defeat in their efforts. Though the Hindu community seemed to advance in a number of fields in Tamil Nadu especially during the 19th and 20th centuries despite various forms of oppression and destruction. Under- age marriage was among many other factors that resulted in the backwardness of the society. In such a backdrop, the role played by a number of female personalities was immensely commendable for the reawakening activities. R.S. Subbalakshmi, Dr. Muthulatchumi Rettiyar, Sarojini Naidu, etc are a few to be added to the list of the reformers who tirelessly put all their efforts for the reawakening of Tamil women. Most notably, R.S. Subbalakshmi successfully carried out her mission towards the educational renaissance of widows. Her service has to be specially noted for her careful forward without getting caught into the clutches of the British rulers, instead obtaining their cooperation and support. She carried out her educational activities adopting the modern educational reforms of the British, while preserving the national heritage of India. The Institutions such as Saratha Ashram, Sri Saratha United Women Society, Sri Saratha Vidyalayam, which played a major role in the educational renaissance of the South Indian women, were established by her. She had to encounter untold hardships to operate those Institutions which brought a turning point in a number of educated women. Since she undertook her activities irrespective of societal differences, the rulers, philanthropists and well wishers offered their fullest support and assistance. Her activities were pioneer for the creation of other social organizations and Institutions. She is to be regarded as a forward thinker who always thought of the well being of not only the women of Tamil Nadu but of the whole South India.

**Keywords:** Hindu Community, Educational renaissance, Widows, British rule, R.S. Subbalakshmi

## முன்னுரை

இந்தியாவில் இந்து சமுதாயத்தின் எழுச்சி மிகுந்த காலகட்டங்களில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் முக்கியமான காலகட்டமாகும். ஐரோப்பியர்களின் காலனித்துவ நோக்கு இந்தியரின் சமயம்,

நம்பிக்கை, பண்பாடு, மொழி, கலை, இலக்கியம் முதலான பரப்புகளில் ஆழமான தாக்கத்தினைச் செலுத்தியுள்ள போதிலும் மேற்குறித்த புலங்கள் பூகோளமயமாவதற்கும் கால்கோளிட்டது. இதனை மறுதலிப்பது கடிமானது. பண்டைக்காலம் முதலாக இந்தியாவிற்கும் ஏனைய மேற்குல நாடுகளுக்கும் இடையிலான வணிக உறவுகள் இருந்திருப்பினும் அவை பிரித்தானியர் ஆட்சிக்காலம் அளவிற்கு பிரபல்யம் அடைந்ததாக அறியமுடியவில்லை. பழமை பேணும் வழக்கத்தினையுடைய இந்து சமுதாயக்கட்டமைப்பு, சமூக வர்க்க வேறுபாடுகளால் புகழ் பெற்றிருந்த காலமும், ஆணாதிக்கம் நிலைபெற்றிருந்த காலமும் அதுவே. இத்தகைய சூழலில் இந்தியாவிலே பல புலங்களிலும் மறுமலர்ச்சியினை அவதானிக்க முடிகின்றமை இங்கு கவனத்திற்கொள்ளத்தக்கது. ஆய்வுப்பரப்பினைக் கருத்திற் கொண்டு பெண்களின் கல்வி தொடர்பாக ஏற்பட்ட மாற்றங்கள் மாத்திரம் இங்கு ஆராயப்படுகின்றன.

பழங்கால இந்தியாவிலே காலந்தோறும் பெண் ஆளுமைகளின் தோற்றம் குறித்த பதிவுகளை வேதங்கள் முதலான இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடைக்கின்றன. பண்டைக்கால இந்துப் பெண்கள் புலவர்கள், அரசியர்கள், அரசசபை ஆலோசகர்கள், போர் வீராங்கனைகள், வைத்தியர்கள், சோதிடர்கள், தத்துவ ஞானிகள் எனப் பல பரப்புக்களிலும் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

மனுதர்ம சாத்திரம் முதலான இந்து இலக்கியங்களில், பெண்கள் தொடர்பான சட்டங்கள், அச்சட்டங்களில் அவர்களுக்கே உரித்தான உரிமைகள் தொடர்பான வியாக்கியானங்கள் பலவும் விரவிக்காணப்படுகின்றன. இந்து சமுதாயத்தில் பெண்கள் பற்றிய விடயங்கள் சாத்திர ரீதியாகவும், கோட்பாட்டு ரீதியாகவும் எழுத்துருவில் அமைந்திருக்கும் அதேசமயம் யதார்த்த வாழ்க்கையில் செயற்பாட்டு ரீதியாக அவை பின்தங்கிய நிலையிலே காணப்பட்டன. இந்த இடைவெளியை சமயப்பிரசாரகர்கள் நிதானமாகச் செயற்பட்டு மதமாற்றம் முதலான தமது காலனித்துவத்தின் இலக்குகளை இலகுவில் அடையும் சூழல் காணப்பட்டது. இந்நிலையிலே சமுதாயத்தில் இந்துப் பெண்கள் தொடர்பாக நிலவிய அவலநிலை பற்றிய சிந்தனைகள் அரும்பத் துவங்கின எனலாம்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில கல்வி பயின்ற சுவாமி விவேகானந்தர் உள்ளிட்ட சமுதாய சிந்தனையாளர்கள் இந்தியப் பெண்கள் தொடர்பாக வெளி நாடுகளிலும் தம் நாட்டிலும் புரட்சிகரமானதும் சிந்திக்கத் தக்கதுமான பல சிந்தனைகளை முன்வைத்து பல கூட்டங்களை நடாத்தினர். அமெரிக்காவின் சிக்காகோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தரின் இந்தியப் பெண்மணிகள் என்னும் பொருண்மையிலான சொற்பொழிவு சமகால இந்தியப் பெண்களின் கல்வி, திருமணம் ஆகிய தளங்களில் பல மாற்றங்களை உண்டுபண்ணியது. இந்தியர்களிடம், குறிப்பாகப் பெண்களிடம், தொண்டாற்ற தமது மேலைநாட்டு பெண் சீடரான சகோதரி நிவேதிதையை இந்தியாவிற்கு வரவேற்றார் சுவாமி விவேகானந்தர். அதேசமயம் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்குத் தமிழ்நாட்டில் செயல்வடிவம் கொடுத்த பெண் ஆளுமையாக அடையாளங் காணப்படுபவர்தான் சகோதரி ஆர்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள். இவர் தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தின் உறையூர் கிராமத்தில் 1886ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி சுப்பிரமணிய ஐயருக்கும் விசாலாட்சி அம்மையாருக்கும் குடும்பத்தில் மூத்த மகளாகப் பிறந்தவர். பதினோர் வயதில் வைதவ்ய நிலையையெய்திய (விதவை நிலை) இளம்பாலகி. இளம் வயதில் உண்டான தம் வாழ்வின் அவலத்தினை உடனே அறியும் பக்குவம் இல்லையாயினும் காலப்போக்கிலே அந்தக்கசப்பான அனுபவம் அவரைத் தமிழகப் பெண்களின் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கத் தூண்டியது எனலாம் (Malathi, 1989; Hancock, 1993). இன்றைய காலகட்டத்தில் பெண்ணியப் பார்வையில் விதவை என்னும் சொல்லைக் கையாள்வது பொருத்தமுடையதன்று. அச்சொல்லின் கையாள்கை நேரடியாகவே அவர்களைப் பாதிக்கும் எனக்கருதி பெரும்பாலான இடங்களில் விதவை என்னும் சொற்பதத்திற்குப் பதிலாக வைதவ்யம் என்னும் சொல் கையாளப்படுகின்றது. இருப்பினும் சில இடங்களிலே அது தவிர்க்க முடியாமல் போகின்றது.

## 19ஆம், 20ஆம் நூற்றாண்டுத் தமிழகமும் சகோதரி ஆர்.எஸ். சுப்புலட்சுமியும்

இந்தியாவின் பொதுவான வரலாற்றுக் காலகட்டத்திலிருந்து தமிழகத்தின் வரலாற்றை வேறுபடுத்திப் பார்ப்பது கடினம். பரந்துபட்ட பாரத தேசத்திலே ஆட்சியாளர்கள் பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வேறுபடினும் காலச்சூழல் ஒரே விதமானதாகவே காணப்பட்டது. ஆய்வுப் பொருண்மையினைக் கருத்திற்கொண்டு அக்கால சூழலில் இந்துப் பெண்கள் தொடர்பாக நிலவிய

பாலிய விவாகம், (குழந்தைத் திருமணம்) பெண் குழந்தைகளின் வைதவ்ய நிலை, அவர்களுக்கான கல்வி மறுப்பு முதலான விடயங்களை மையப்புள்ளியாகக் கொண்டு தமிழக சூழலை சகோதரி ஆர்.எஸ்.சுப்புலட்சுமியுடன் இணைத்து நோக்கப்படுகின்றது.

தமிழகத்திலே பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் பெண்கள் தொடர்பாகச் சிந்திக்கத்தூண்டும் தளங்களில் திருமணம், கல்வி, தொழில் ஆகியவை மிகுந்த அவதானத்திற்குரியவை ஆகும். பதினாறாம் நூற்றாண்டிலே அந்நிய ஆட்சியாளர்கள் இந்துப் பெண்களைத் தமது இச்சைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு கடத்திச் சென்றனர். இது போன்ற சில காரணங்களுக்காக குழந்தைத் திருமணத்தை ஒரு தீர்வாக இந்து சமுதாயம் கருதியது. கடந்து போன காலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட தீர்வொன்றை பிரச்சினை இல்லாத பிற்கால சூழலிலும் தொடர்ந்த போதுதான் தீர்வே சாபக் கேடானது (Swami Dayanandar, 2018).

மூன்று, நான்கு வயதை அடைந்த குழந்தைகளைக் கணவன் மனைவியாக மாற்றுகின்ற சமுதாய சம்பிரதாயம் விடுபட்டபாடில்லை. தாலியும், கூறையும்(கல்யாணச்சேலை) அவர்களது அடையாள மங்கலச் சின்னங்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டன. குழந்தைக் கணவன் மரணித்தால் பெண் குழந்தை விதைவையாக்கி சமூகத்தில் இருந்து வேறுபடுத்தி நோக்கப்படுகின்ற நிலை தொடர்ந்த வண்ணமே இருந்தது. மொட்டையடித்து, வெள்ளைச் சேலையினால் தலைமுதல் பாதம் வரையான அவயவங்களை மறைத்து முக்காடு இட்டு, அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கழற்றிப் பெண் குழந்தைகளை வைதவ்யம் என்னும் அபலைப் பெண்ணாக சமுதாயம் அடையாளப்படுத்துகின்றது. (சுவாமி தயானந்தர், 2018) இவற்றினைக் காரணமாகக் கொண்டு அவர்களுக்கான கல்வி முதலிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்ற சூழல் தணிந்ததாகத் தெரியவில்லை.

கல்வியறிவு அறவே இல்லாத பெண்குழந்தைகள் தாய்மை அடைகின்ற தொகை அதிகரித்த வண்ணமே காணப்பட்டது. இது சமூகத்தில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தியமை குறித்துக் காட்டப்பட வேண்டியதாகும். அதாவது பதினொன்று, பன்னிரண்டு வயதுக் குழந்தைகள் தாயாகின்ற சூழலில் தாய், சேய் இறப்பு விகிதம் அதிகரித்தல், ஆரோக்கியம் அற்ற குழந்தைகளை பெற்றெடுத்தல் முதலியவை குடும்ப வாழ்வில் அதிகரித்த வண்ணமே காணப்பட்டது. சாத்திர, சமுதாய விரோதமான இச்செயற்பாட்டினை ஒரு புனிதச்சடங்காக மாற்றுகின்ற மனோபாவத்திலிருந்து சிலரை விடுவிப்பது இலகுவான காரியமாக் காணப்படவில்லை.

சகோதரியின் தனிப்பட்ட குடும்ப வாழ்வில், தனது தாயாரின் தங்கையும் குழந்தை வைதவ்ய நிலையையடைந்த சூழலில் குடும்பத்தில் மூத்தவளான தானும் அவ்வாறான நிலையினை எய்தியமையை காலப்போக்கில் சகோதரி உணரத்துவங்கினார். தனது மகளின் மனவலிமையை இந்த சூழல் சிறிதேனும் பாதிக்கக் கூடாது என்பதில் அவரது தந்தை உறுதியாக இருந்தமை ஆய்விற் புலனாகின்றது. அவரது தந்தை கட்டடப் பொறியியலாளர் சிறந்த கல்விமான். அவருக்கு இருந்த பகுத்தறிவு சார்ந்த நவீன நோக்கு சகோதரியின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாகவே அடையாளம் காண முடிகின்றமை இங்கு குறித்துக்காட்டப்பட வேண்டியதாகும். சங்கீதம், சமஸ்கிருதம் முதலான பாடங்களை வீட்டில் வைத்தே அவளுக்குப் போதனை செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன (Swami Dayanandar, 2018). காலப்போக்கில் இறுக்கமான சமுதாய நம்பிக்கைகள் கலந்த எழுதாத சட்டங்களைத் தகர்த்து சகோதரி வெளியில் சென்று கல்வி பயிலக் கூடிய சூழலை உருவாக்கியதும் அவரது தந்தை என்பது ஈண்டு குறிப்பிடற்குரியது (Swami Dayanandar, 2018).

வைதவ்ய நிலையை எய்திய பெண்களை அதுவும் குழந்தைகளைப் போதனாசாலைகளுக்கு அனுப்புவதை இலகுவான காரியமன்று. மேலும் பருவமடைந்த வைதவ்ய நிலைப் பெண்கள் மொட்டை அடித்து முக்காடு இடும் வழக்கமும் தொடர்கதையாகவே நிலவியது. இவ்வழக்கத்தினை நிராகரித்து சகோதரி வெளியில் சென்று கல்வி பயில ஆரம்பித்தமை தமிழகப் பெண்களின் வாழ்வில் உண்டாகவிருந்த எழுச்சிக்கு முதற்படியாகவும் அவர்களின் அமைதியான புரட்சிக்கு ஒரு கால்கோளாகவும் கொள்ளமுடியும். சகோதரியின் பாடசாலைக் கல்வி நிறைவும் ஒரு சாதனைப் பதிவாகவே கொள்ளமுடிகின்றது. இறுதிநிலைப் பரீட்சைக்குத் தோற்றிய பன்னிருவரில் சகோதரி மாத்திரமே பெண் ஏனையோர் ஆண்களாவர். அதிலும் இருவர்தான் சித்தியெய்தினர் அவற்றிலும் சகோதரி அடங்குகின்றார். அக்கால வழக்கத்தின்படி அந்தணப் பெண்கள் அதுவும் வைதவ்யப் பெண்கள் ஆசிரியர் தொழிலில் ஈடுபடவில்லை. இவ்வழக்கத்தினை தகர்த்து சகோதரி ஆசிரியை ஆனார்.

இச்செயற்பாடு தமிழகப் பெண்களின் கல்வியில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியது எனலாம் (Malathi, 1989).

## கல்வி மறுமலர்ச்சி

கல்வியே தமிழகப் பெண்களை அறியாமை என்னும் இருளில் இருந்து விடுதலை பெறத்தக்க ஒரே உபாயம் ஆகும். அத்துடன் அதுவே அவர்களின் எதிர்காலம் பற்றிய கனவுகளை நனவாக்கவல்லது என்பதனையும் சகோதரி தன் அனுபவத்தினூடாக இனங்கண்டு கொண்டார். தமிழக இந்து சமுதாயத்தில் கீழ்ச்சாதி, மேல்சாதி என்ற சாதிக்கட்டமைப்பு எல்லாவகையான தளங்களிலும் பெருங்கேடுகளை விளைவித்தது. அதுவும் கல்விப்புலத்தில் சொல்லொண்ணா துயரங்களுக்கு அடிப்படையாகவும் அமைந்தது எனலாம். சுவாமி விவேகானந்தர் நிருபர் ஒருவரின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருக்கையில், நிருபர் சுவாமியிடம்,

"நம் பெண்களுக்குப்

பிரச்சினைகளே இல்லையா? என வினா எழுப்ப, சுவாமி அதற்கு, ஏன் இல்லை

பல உள்ளன. எனினும் கல்வி என்ற மந்திரத்தால் தீர்க்க முடியாத பிரச்சினையே

இல்லை..."

எனப்பதில் வழங்குகின்றார் (Swami Vivekanandar, 2017). மேலும் அவர் இன்னுமொரு இடத்தில் இந்தியாவிற்கு இரு பெருந் தீமைகள் உள்ளன எனவும். அவற்றிலே ஒன்று பெண்களை அடிமைகளாக நடாத்துதல் மற்றொன்று சாதி என்னும் பெயரால் ஏழைமக்களை நசுக்குதல் எனக் கூறுகின்றார். இவைகளை சகோதரி தாம் வாழ்ந்த சூழலில் நிதர்சனமானவையாக அடையாளம் காண்கின்றார். பெண் என்னும் பாலினப்பாகுபாடும், கீழ்ச்சாதி என்னும் வர்க்க வேறுபாடும் சுதந்திரமாகக் கல்வி கற்பதில் பெருந்தடைகளை ஏற்படுத்துகின்றன என்பதை உணர்ந்து இத்தடைகளை எவ்வாறு அகற்றலாம் என்பதுவே அவர் முன்னிருந்த வினாகும் (Malathi, 1989; Ramanathan, 1994). இவ்வேளையில்தான் தம் வாழ்வின் குறிக்கோள் இதுதான் என்பதனைப் புரிந்து கொண்டார். தான் கல்லூரியில் படித்த காலத்தில் அங்கு பணிபுரிந்த ஆங்கிலக் கன்னியாஸ்திரிகளின் தூய வாழ்வும் அவர்களின் தன்னலமற்ற தொண்டும் அவருக்கு முன்மாதியாகத் திகழ்ந்தன. தமிழகப் பெண்களின் எதிர்காலம் கல்வியினால் விருத்தியடையும் என்பதனையும் தம்மனதிற் பதித்துக் கொண்டார்.

## கல்வி நிறுவனங்களும் மாணவர் இல்லங்களும்

தமிழ்நாட்டுப் பெண்களின் கல்வி மறுமலரச்சியில் தமிழகத்திற் சகோதரியினால் தோற்றுவிக்கப்பட்ட ஆச்சிரமங்களும், சங்கங்களும் அத்துடன் சகோதரியுடன் தொடர்பைப் பேணிய ஆங்கிலேயப் பள்ளிக்கூடங்களும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தின எனலாம். அத்துடன் மேலை நாட்டு ஆளுமைகளும், தமிழக ஆளுமைகளும் சகோதரியின் அருந்தொண்டிற்குப் பக்கபலமாக இருந்தனர். ஸ்ரீசாரதா வித்தியாலய பெண்கள் மேல் நிலைப்பள்ளி, ஸ்ரீசாரதா வித்தியாலய ஆரம்பப் பயிற்சிப் பள்ளி, ஸ்ரீசாரதா வித்தியாலய விடுதி, சாரதா இல்லம், குப்பம் பள்ளி, சாரதா சேரிப்பள்ளி முதலிய பாடசாலைகளினதும், இல்லங்களினதும் உருவாக்கத்தில் சகோதரி அயராது உழைத்தவர். அத்துடன் சகோதரியின் இல்ல மாணவிகளின் உயர்படிப்புகளுக்கு ஆங்கிலேயர்களால் நடாத்தப்பட்ட இராணி மேரிக்கல்லூரி, லேடி வெலிங்டன் பள்ளி ஆகியவையும் துணையாக இருந்தன.

## வைதவ்ய பெண்களுக்கான ஆச்சிரமம்

மிஸ் கிறிஸ்டினா லின்ச்சுக்கும் சகோதரியின் தந்தையாருக்கும் இடையிலான அலுவலகத் தொர்பினால், ஆசிரமம் ஒன்றினை தாபிப்பது பற்றி இருவரும் சிந்தித்தனர். முதலில் குழந்தைத் திருமணத்தினாற் பாதிப்புற்ற பெண் குழந்தைகளுக்கான ஆசிரமம் பற்றிய திட்டம் ஒன்றினை அமுல்படுத்த எண்ணினர். தனது மகளின் படிப்பு நிறைவு பெற்றதும் இதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம் என சுப்பிரமணிய ஐயர் லின்சுவிடம் கூறினார். பயனற்ற வைதவ்யப் பெண்கள்

எனக்கருதப்பட்டவர்களை கல்வியறிவூட்டி பிறரின் நிழலில் வாழாது தமது சொந்தக் காலில் நிற்கும் வல்லமையூட்டுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது. இவ்வாசிரமத்தில் பக்தி, ஞானம் என்பனவற்றுக்கு முன்னுரிமை அளிப்பது அதன் தனித்துவமான செயற்பாடுகளாக வரையறுக்கப்பட்டிருந்தன. சகோதரியின் கற்றல் நிறைவு பெற்ற பின்னர் சகோதரியும், மிஸ் லின்சுவும் கலந்துரையாடி தனியார் நன்கொடை மூலம் 1912ஆம் ஆண்டில் சென்னையின் எழும்பூரிலுள்ள சகோதரியின் வீட்டிலேயே ஐந்து சிறுமிகளைக் கொண்டே அவ்வாசிரமம் ஆரம்பித்து வைக்கப்பட்டது (Karthikeyan, 2019). இவ்வாசிரமத்திற்குச் சாரதா இல்லம் எனப்பெயர் சூட்டப்பட்டது. காலப்போக்கிலே மேலும் பல பெண்கள் இவ்வாசிரமத்தில் சேர்ந்து கொண்டனர். தமது வாழ்வில் பல சாதனைகளை ஈட்டினர். குறிப்பாக தமிழகத்தின் வைதவ்யப் பெண்களின் கல்வியில் இவ்வாசிரமம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியமை மனங்கொள்ளத்தக்கது. 1918ஆம் ஆண்டு சுமார் 70 விதவைகள் இவ்வாசிரமத்தில் தங்கிருந்து படித்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசின் உதவித் தொகையும் கிடைத்தன (Ramanan, 2021a). இருப்பினும் இவ்வாசிரமம் தோற்றம் பெற்ற ஆரம்பத்தில் பல சாவால்களை எதிர் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவை பற்றி பின்னர் நோக்குதல் பொருத்தம்.

## கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

ஆசிரமத்தில் தங்கிப் படித்த பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முறைசார் முறைசாரா கல்வி தொடர்பான செயற்பாடுகள் பெருஞ்செல்வாக்கைச் செலுத்தின எனலாம். பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கலைத்திட்டத்திற்குத் தகுந்தாற் போல் கற்பித்தற் செயற்பாடுகள் ஆசிரமத்தில் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளிலும் நடைபெற்றன. மொழிப்பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது. தமிழ் மொழியுடன் ஏனைய தென்னிந்திய மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு, எனபனவும் வடமொழியான சமஸ்கிருதமும் பயிற்றுவிக்கப்பட்டதுடன் ஆங்கிலமும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. கர்நாடக சங்கீதம் பயின்ற சகோதரியால் வார இறுதி நாட்களில் சங்கீதம், நாடகம், நடனம் முதலான கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன. அத்துடன் மகாபாரத, இராமாயண கதைகளும் உரிய விளக்கங்களுடன் போதிக்கப்பட்டன. ஆசிரமப்பிள்ளைகள் தத்தமது அன்றாட கடமைகளை அவரவரே செய்ய வேண்டும் என்பது நியதியாக இருந்தது. ஓய்வு நேரங்களில் மரினா கடற்கரையில் விளையாடுதல் அவர்களின் உடல்உள விருத்தியில் மாற்றங்களை கொணர்ந்தது எனலாம். இவையெல்லாம் சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்தாற்போல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதாவது சுவாமி விவேகானந்தர் இந்தியப் பெண்களுக்கு எத்தகைய கல்வி பொருத்தமானது என்பதனைக் கூறுமிடத்து,

"தர்மம், கலைகள், விஞ்ஞானம், குடும்பக்கடமைகள், சமையல், தையல்,
சுகாதாரம், இவ்வாறான எளிமையான பாடங்களைப் போதிப்பது நல்லது.
இலட்சியப் பெண்மையின் பண்புகளை எப்போதும் அவர்கள் முன்வைத்து
மிக உயர்ந்த தியாகத்தில் அவர்களுக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகுமாறு
செய்ய வேண்டும்...."

என்று கூறுகின்றார் (Swami Vivekanandar, 2017). சகோதரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பிற நிறுவனங்களும் ஆளுமைகளும் துணையாக இருந்துள்ளனர்.

## ஸ்ரீசாரதா மாதர் ஐக்கிய சங்கம்

மாலை நேரத்தில் அவரது வீட்டில் இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசக்கதைகள் பாடலாகவும். அதற்கான வியாக்கியானமாகவும் சொல்லப்பட்டன. அதனைக்கேட்க இந்துப் பெண்கள் மாத்திரம் அன்றி கிறிஸ்தவ, இஸ்லாமிய, பாரசீகப் பெண்களும் அவரது வீட்டிலே ஒன்று கூடினர் (Karthikeyan, 2019). 1912ஆம் ஆண்டிலே முறைப்படியான அமைப்பாக ஸ்ரீசாரதா மாதர் ஐக்கிய சங்கம் செயற்படத் தொடங்கியது. அங்கு மாதாந்த வாராந்த கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. இவ்வொன்று கூடல்கள் பெண்களின் விழிப்புணர்வில் கணிசமான செல்வாக்கினைச் செலுத்தியது.

இவ்வமைப்பின் தலைவியாக மிஸ் பேட்டர்ஸனும் செயலாளராக சகோதரி அவர்களும் செயலாற்றினார்கள்.

### திருவல்லிக்கேணி பெண்கள் பள்ளி

திருவல்லிக்கேணியில் ஆங்கிலேயரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பெண்கள் பள்ளியில் ஆசிரியராக நியமனம் பெற்று அங்குள்ள ஆசரியர் பயிற்சித் துறைக்கும் பொறுப்பாக்கப்பட்டார். 1913ஆம் ஆண்டு திருவல்லிக்கேணிக்கு ஆசிரமமும் மாற்றப்பட்டது (Ramanan, 2021b). இவ்வாறு நியமனம் பெற்ற முதல் தமிழ்ப்பெண் இவர் என்பதும் குறித்துக்காட்டப்பட வேண்டியதாகும். இப்பதவி தமிழகப் பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது.

### சென்னை இராணி மேரிக் கல்லூரி

1914 இல் 17 பெண்களுடன் ஆரம்பித்த பெண் பள்ளிக்கூடம் தமிழகப் பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றியது எனலாம். சகோதரியின் ஆச்சிரமத்தைச் சேர்ந்த 30 வைதவ்யப் பெண்களும் இக்கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றனர்.

### ஐஸ் ஹவுஸ்

சாரதா ஆசிரமத்தின் எழுச்சிப் பாதையில் சென்னையில் அமைந்திருந்த ஐஸ் ஹவுஸ் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. ஆசிரமப் பிள்ளைகளுடன் சகோதரி 1915 ஆம் ஆண்டு அங்கு குடியேறினார் (Swami Dayanandar, 2018). எண்ணிக்கையில் அதிக மாணவர்கள் தங்கியிருந்து படிக்கத்தக்க இடவசதி அங்கு காணப்பட்டமை மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்குக் காலாக அமைந்தது. அக்காலத்தில் அந்த இடம் அரச மாளிகை போன்றே காட்சியளித்ததாக சகோதரி குறிப்பிட்டுள்ளார். தனியாரின் சொத்துடமையாக இருந்த இவ்விடம் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்றக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. சென்னை இராமகிருஷ்ண மடம் தற்காலிகமாக அங்கு இயங்கியமையையும் அறிய முடிகின்றது.

### லேடி வெலிங்டன் பள்ளி (குப்பத்துப் பள்ளி)

தமிழகத்துப் பெண்களின் கல்வி மறுமலர்ச்சியில் காத்திரமான பங்காற்றிய கல்வி நிலையங்களில் லேடி வெலிங்டன் பள்ளிக்கு தனித்துவமான இடமுண்டு. 1922ஆம் ஆண்டு இப்பள்ளி துவங்கியது. சகோதரியின் அயராத முயற்சியும் கூடவே இருந்த வெளிநாட்டுப் பெண்களான மிஸ் பிறேஸர், லின்ச் ஆகியோரின் துணையும் இப்பள்ளிக் கூடத்தின் உருவாக்கத்தில் கலந்திருந்தன. இப்பள்ளிக்கூடத்தில் முதன்முதலாக ஆசிரமப் பிள்ளைகளுடன் மீனவ சமூகப் பிள்ளைகளையும் இணைத்துக் கற்பிக்கக் கூடிய முற்போக்கான திட்டத்தினை நெஞ்சில் இருத்தி அதற்கான செயற்பாட்டில் சகோதரி ஈடுபட்டார். அப்போதைய சமூகக் கட்டுப்பாட்டை மனதில் கொண்டு அதற்கேற்றால் போல் மாணவிகளுக்கு கற்றல் ஏற்பாடுகளைச் செய்தார். அத்துடன் முதலாம் உலகப்போர் மூண்டிருந்த காலத்தில் குப்பத்துக் குழந்தைகளுக்கு இந்த இடத்திலே கற்பித்தலைத் துவங்கினார்.

### கடலூர் சாரதா சேரிப்பள்ளி

கடலூருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற சகோதரி தமது பணியைச் செய்துகொண்டிருந்த வேளை, பள்ளியருகே இருந்த சேரிப்பகுதிக் குழந்தைகளுக்கு தினமும் மாலை வேளை ஒரு மணி நேரம் வளர்ந்த மாணவிகளைக் கொண்டு எழுத வாசிக்கப் பழக்கினார். முதலில் இருபது பிள்ளைகள் இணைந்து கொண்டனர். பின்னர் பிள்ளைகளின் தொகை அதிகரித்தது. இடவசதி இல்லாத சூழலில் ஒரு துண்டு நிலத்தை வாங்கி தென்னம் ஓலைகளைக் கொண்டு கொட்டகை ஒன்றைக் கட்டி முதல் மூன்று வகுப்புக்களைக் கட்டினார். அதனை அரசாங்க ரீதியாகச் செயற்படும் பள்ளியாகவும் மாற்றினார்.

இச்சேவை சமுதாயத்தில் பின்தங்கியிருந்த அடிமக்களின் பள்ளைகளின் கல்வியில் ஒரு பேரெழுச்சியை உண்டுபண்ணியது.

## ஸ்ரீசாரதா வித்தியாலயாக்கள்

ஸ்ரீசாரதா வித்தியாலயா என்ற பெயரில் வெவ்வேறு ஆண்டுகளில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளிகள் என ஒவ்வொன்றாக ஆரம்பிக்கப்பட்டன.

1927 ஆம் ஆண்டு ஸ்ரீசாரதா வித்தியாலயா என்ற பள்ளி ஆரம்பமானது. அந்நிய கலாசார மோகத்தினால் தமது கலாசாரத்தினை மறந்து செயற்பட்டவர்களே இப்பாடசாலையின் உருவாக்கத்திற்குக் காரணமானார்கள். அதாவது வெலிங்டன் பள்ளியில் தமது சுதேச பண்பாடுகளை சகோதரி பேணிக்காப்பதைக் கண்ட சிலர் அவற்றைத் தடைசெய்ய எத்தணித்து பலே நடனம் முதலிய ஆங்கில நடனங்களை மாணவிகளுக்கு பயிற்றுவிக்க எண்ணியதன் பயனாக சகோதரி தமக்கென தனியான பாடசாலை ஒன்றைத் தாபிப்பதில் ஆர்வமாக இருந்தார். ஸ்ரீசாரதா மாதர் ஐக்கிய சங்கத்தின் மூலம் இப்பாடசாலையினை ஆரம்பித்து 16 முதல் 25 வரையான வயதுடைய பெண்களைச் சேர்த்து அவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றார்.

## இராமகிருஷ்ண மடம்

சகோதரியின் கல்வி மறுமலர்ச்சிப் பயணத்தில் இணைந்து கொண்ட நிறுவனங்களில் இராமகிருஷ்ண மடம் குறிப்பிடத்தக்கது. சகோதரியின் ஆச்சிரமத்தில் படித்த பிள்ளைகள் பலரும் இராமகிருஷ்ண மடப் பாடசாலைகளிலும் சேர்ந்து பயின்றனர் சகோதரியால் உருவாக்கப் பட்ட ஸ்ரீசாரதா வித்தியாக்கள் பிற்காலங்களில் இராமகிருஷ்ண மடத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. சகோதரியின் வீரம்பமும் அதுவாகவே இருந்தது. சகோதரி தாம் தொடக்கிய பள்ளிகளுக்கு சரஸ்வதி தேவியின் பெரையே சூட்டியவர். இராமகிருஷ்ண மடத்தினர் பெண்பிள்ளைகளின் ஆசிரமத்திற்கும் பாடசாலைகளுக்கும் அன்னை சாரதா தேவியின் பெயரையே சூட்டினர். இரு நாமங்களும் ஓரிடத்தில் சங்கமித்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலை நாட்டு ஆளுமைகள்

இந்தியப் பெண்களின் சமுதாய விடுதலையில் மேலை நாட்டு ஆளுமைகளின் பங்களிப்பினை குறைத்து மதிப்பிட முடியாது. சகோதரியின் பெண்கள் நலன் தொடர்பான எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் சகோதரியுடன் கூடவே இருந்தமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. மிஸ் பிறேஸர், மிஸ் லின்ச் முதலியோரும், சென்னைக் கவர்னர் தம்பதிகளான லாரட் மற்றும் லேடி பென்ட்லாண்டும் ஆசிரமப் பிள்ளைகளின் நலனிற்காக சகோதரியின் சேவையைப் பாராட்டி நிதியுதவியும் நல்கினர். அத்துடன் இராமகிருஷ்ண மடத்துடன் தொடர்புடைய அன்னிபெசன்ட் அம்மையாரும் அவர்களுக்கான ஆதரவை நல்கினார். மிஸஸ் காட்பரீ ஆசிரமத்தில் புதிதாகச் சேர்ந்த கற்றலில் இடர்பாடுள்ள பிள்ளைகளுக்கு கற்பித்து அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இதனால் சகோதரியின் சேவைக்கு அங்கீகாரம் கிடைத்ததை அறிந்த சமூகத்திலுள்ள ஏனையோரும் தங்களின் குழந்தைகளையும் இணைத்துக் கொள்ளுமாறு சகோதரியிடம் வேண்டினர். அவரும் குழந்தைகளை இணைத்து தமது பணியை தொடர்ந்தார்.

## தமிழ்நாட்டு ஆளுமைகள்

வைதவ்யக் குழந்தைகளின் நலன்சார்ந்த சகோரியின் பணியில் அவருக்கு ஆதாரமாக இருந்தவர் அவரது சித்தி வாலாம்பாள். சகோதரியின் முழு வளர்ச்சியிலும் தமது பங்களிப்பினைச் செய்த வாலாம்பாளும் ஒரு காலத்தில் வைதவ்யக் குழந்தையாக இருந்து சமுதாயக் கட்டுப்பாடுகளால் கட்டுண்டு இருந்தவர் என்ற வகையில் அவர் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவத்தினை தமது பெறாமகளும் பெறக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். பாலாம்பாள் தனியாக ஆராயப்பட

வேண்டியவர். சகோதரியைச் செதுக்கிய நவீன சிற்பி அவர். அவர் அனைத்து வைதவ்யக் குழந்தைகளுக்கும் நேரிய வழிகாட்டியாகவும் செயற்பட்டார். அடுத்து சகோதரியின் தந்தை சுப்பிரமணிய ஐயர். தனது மகள் வைதவ்ய நிலையை அடைந்த போது ஆரமபத்தில் சற்றுக் கலக்கமடைந்த ஐயர் சடுதியாகத் தன்னைத் தேற்றிக்கொண்டு தமது மகளின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்த பகுத்தறிவாளர் அவர்.

சகோதரியின் கல்விப் பயணத்திலே உ.வே. சாமிநாதையரின் பங்கும் குறிப்பிடற்குரியது. தமது தந்தையை அறிந்தவர் என்ற வகையில் உ.வே.சாவிற்கு தன்மீது அதிக அக்கறையிருந்ததாக சகோதிரி ஓரிடத்திலே குறித்தக் காட்டுகின்றார். அவரது ஆதரவும் வழிகாட்டுதலும் தனது வளர்ச்சியிலே தவிர்க்க முடியாதவைகளாகும் எனவும் கூறியுள்ளார். அவையே பிற்காலத்தில் தமது ஆசிரமப் பிள்ளைகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்க ஆதாரமாக இருந்தது எனவும் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்துப் பெண்களின் நிலை தொடர்பாக சிந்தித்தவர்களிலே டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டியார் குறிப்பிடத்தக்கவர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே சென்னையின் முதல் பெண் மருத்துவர் இவர். ஆசிரமப் பிள்ளைகளின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய சகோதரியின் சக பயணிகளில் இவரும் ஒருவர். ஆசிரமத்தில் தங்கியிருந்து கல்வி பயின்ற மாணவிகளுக்கு வாரத்தில் ஒரு தடைவ மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து அவர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உறுதுணையாக இருந்தவர். இவரைப் போன்று இவரது கணவர் டாக்டர் சுந்தரரெட்டியும் குறிப்பிடத்தக்கவர்.

ஆசிரமத்தைப் பார்வையிட்டு அங்கள்ள குழந்தைகளுக்காக தம்மால் முடிந்த ஊதவிகளைச் செய்தவர்களில் திருமதி சறோஜினி நாயுடும் ஒருவர். அவரது பாடும் திறனால் ஆசிரம மாணவிகள் அவர்மீது அலாதி பிரியம் கொண்டிருந்தனர். ஆத்துடன் சட்டமேதை ராஜாஜியும் சகோதரியின் பணிக்கு பக்கபலமாக இருந்தவர் (Swami Dayanandar, 2018).

இவ்வாறு ஏனைய நிறுவனங்களும் ஆளுமைகளும் ஆசிரமச் செயற்பாட்டிற்குத் துணையாக இருந்த போதிலும் சகோதரி பல சாவல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது. இவை அக்கால சூழலில் தவிர்க்க முடியாதவையாகவே காணப்பட்டன.

## தமது சேவைக் காலத்தில் எதிர்கொண்ட சவால்களும், தீர்வுகளும்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அறிவியல் பூர்வமான பல செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் தமிழர் சமுதாயம் விழித்தெழுந்தபாடில்லை. இந்நிலையில்தான் சமுதாயத்தின் அஞ்ஞான இருளை அகற்ற சகோதரி துணிந்தார். இவ்வேளையில் தமது சேவைப் பயணத்தின் பாதைகள் கல்லும் முள்ளும் நிறைநத்ததாகவே இருந்ததை அவரே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

தமது கல்விப்பணியின் கேந்திரமான சாரதா ஆசிரமம் ஐந்து மாணவிகளைக் கொண்டே ஆரம்பமானது. ஆரம்பத்திலே அவர் எதிர்கொண்ட சவால்களில் ஆசிரமப் பெண்களின் மறுமணம் தொடர்பான விடயம் குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்திலே இவ்வாறான சீர்திருத்த எண்ணங்களை அமுல்படுத்தினால் தமது நோக்கம் நிறைவேறாமல் போகும் என்ற அச்ச உணர்வு தோன்றியது. ஆசிரமம் வளர்ச்சியடைந்த பின்னர் அவை பற்றி யோசிக்கலாம் என்ற சிந்தனையையே அவர் கொண்டிருந்தார். காலப்போக்கிலே அது தொடர்பாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியார் இதில் பயின்ற பெண்களுக்கு மறுமணம் பற்றி அடிக்கடி சகோதரியுடன் கலந்துரையாடியுள்ளார். முத்துலெட்சுமி அவர்கள் சட்டமன்ற துணைச்சபாநாயகராக இருந்த காலத்தில்தான் விதவைகள் மறுமணம் தொடர்பான சட்டம் நிறைவேறியது (Swami Dayanandar, 2018). சகோதரி மறுமணத்தை எதிர்க்கவில்லை. ஆனால் அதனால் வரவிருக்கும் துன்பத்தினை குறிப்பாக மணமாகாத ஆண்கள், இவர்களை மணக்கும் பட்சத்தில் நித்தம் நித்தம் அவர்களை ஏலவே திருமணமான சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி வருத்துவார்கள் எனவும் அதைவிட இந்நிலையில் இருப்பதே சிறந்தது என்னும் கொள்கையிலே அவர் இருந்தார்.

தமது ஆசிரமப் பெண்கள் பாடசாலைக்குச் சென்று வரும் போதெல்லாம் அவர்களை சமூகம் ஏளனத்துடன் பார்ப்பது, அவர்கள் நேர் எதிர்ப்பட்டால் அபசகுனம் என எண்ணுவது. முதலிய சமூகத்தின் பழிச்சொற்கள் மனதளவில் ஆசிரமப் பெண்களையும் சகோதரியையும் வெகுவாகப் பாதித்துள்ளன.

பாடசாலைகளிலும் ஆசிரமப் பெண்களை விதவைகள் என அழைக்கும் வழக்கம் இருந்தது. அது அங்கு கல்வி கற்ற இளஞ்சிறுமிகளின் மனங்களைத் தளர்வடையச் செய்தது. இது தொடர்பாக மிஸ் பிறேஸர் ஊடாக அங்கு பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஆசிரமத் தொடக்ககாலம் முதலாக நிலையான கட்டடமோ ஏனைய வசதிகளோ இல்லாமையினால் சகோதரியின் திட்டங்கள் ஆமை வேகத்திலே சென்றதாக சகோதரி குறிப்பிட்டுள்ளார். ஆசிரமத்தின் இருப்பிடம் அடிக்கடி மாற்றப்பட்டுக் கொண்டே இருந்தது. இது அவர்களின் செற்பாடுகளில் தாக்கம் செலுத்தியுள்ளன. நிதிப்பிரச்சினைகள் ஏராளமாகக் காணப்பட்டன. இது ஆசிரமத்தின் முன்னேற்றத்தில் பெரிய பாதிப்புக்களை ஏற்படத்தியது எனலாம். பிற்காலங்களில் தனியார் அறக்கொடைகளாலும், அரசாங்க நிதியினாலும் ஆசிரமத்தின் பணிகள் சிறப்பாக இயங்கத்துவங்கின.

ஆசிரமப் பிள்ளைகளுக்கு உண்டான நோய்களும் ஆசிரமத்தின் பணிகளில் இடையிடையே தாக்கம் செலுத்தின எனலாம். 1919 ஆம் ஆண்டு ஏற்பட்ட இன்ஃபுவன்சா நோயினால் ஆசிரமப்பிள்ளைகளும் பாதிப்புற்றனர் (Swami Dayanandar, 2018). அப்போது ஸைமன்ஸன் என்னும் ஆங்கிலப் பெண் மருத்துவர் ஆசிரமப்பிள்ளைகளுக்கு சிகிச்சையளித்தார். இங்கு சகோதரியின் சித்தியின் செயற்றிறன் காரணமாக உயிரிப்புக்கள் ஏற்படவில்லை என அறியமுடிகின்றது.

சகோதரி தான் கல்லூரியில் கற்ற கற்பித்த காலங்களில் மதமாற்றத்திற்குரிய சில செயற்பாடுகளும் நடந்தேறின. பைபிள் கொடுக்கப்பட்டது. அதனை மறுக்காமல் வாங்கிப் படித்து ஆங்கில மொழியில் தேர்ச்சியடைந்ததோடு, தமது இந்து சமயக்கருத்துக்களுடன் அதிலுள்ள சில விடயங்களை ஒப்பியல் ரீதியாக நோக்கவும் முடிந்தது. முதம் மாறிய கிறிஸ்தவ தம்பதிகளை அனுப்பி சகோதரியை மதம் மாற்றம் செய்யும் செயற்பாடடிலும் ஈடுபட்டனர். மதம் மாற்ற வந்த இருவரையும் மீண்டும் இந்து சமயத்திற்கு மாற்றும் வல்லமை சகோதரிக்கு இருந்தது. ஆங்கில அருட்சகோதரிகளைப் போல் வெள்ளை நிறம் ஆடை அணிந்து காலுக்கு சப்பாத்து அணிந்துவரக் கட்டாயப்படுத்தப்பட்ட சகோதரி தமது சொந்தப்பண்பாட்டின் அடையாளத்தை சிறிதளவேனும் மாற்றத்தயாரில்லை என்ற செய்தியை குறிப்பால் உணர்த்தினார்.

பிரித்தானிய அரசுக்கு எதிராக தேசிய காங்கிரஸின் போராட்டம் உக்கிரம் பெற்றிருந்த சமகாலத்திலே சகோதரியும் தமது சேவைகளையும் செய்துகொண்டிருந்தார். 1925ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் சென்னை வருகையில் சகோதரியும் மேடையில் ஏறிப்பேசினார் என்ற தலைப்பிட்ட பத்திரிகைச் செய்தி வந்தது (Swami Dayanandar, 2018). இச்செய்தி சகோதரி மீது ஆட்சியாளர்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்தியது. அது தவறான செய்தி என்பதை அவர்கள் பின்னர் உணர்ந்தனர். அரச ஆதரவோடுதான் தான் தனது பிள்ளைகளை கரைசேர்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்தவர் சகோதரி. சகோதரிக்கு சுதந்திரப் போராட்டத்தல் ஆர்வமும் அனுதாபமும் இருந்ததுள்ளது. அதை வெளிப்படையாகச் செய்தால் தமது நற்பணிக்குப் பங்கம் ஏற்படும் என்பதனை சகோதரி நன்கு உணரந்திருந்தார். பெண்கள் கல்வியில் மேம்பட்டு தங்கள் சொந்தக்காலில் நிற்கச் செய்தாலன்றி வரப்போகும் சுதந்திரத்தை பாதுகாத்து வளர்க்க முடியாது என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையின் வழியே சகோதரியின் செயற்பாடு அமைந்தது எனலாம்.

ஆசிரமத்தின் எழுச்சி மிகுந்த பயணம் பலருக்கு பொறாமையை உண்டாக்கியது. அரசுப்பணத்தை விதவைகளுக்காக ஏன் செலவிட வேண்டும் என்ற கோசத்துடன் இதனை கிறிஸ்தவப் பெண்கள் விடுதியுடன் இணைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். இதை கருத்திற்கொண்ட அரசினரும் குழுவொன்றினை நியமித்தது. அக்குழுவில் திருச்சி சர் தேசிகாச்சாரியார், ஸ்ரீ எம்.சி.ராஜா கல்வி இயக்குனர் அருட்திரு மெஸ்டன் அகியோர் அங்கத்தவர்களாக இருந்தனர். அவர்கள் ஆசிரமத்தின் ஆரம்ப காலம் முதல் தற்காலம் (1912 -1925), வரையான வளர்ச்சினைச் சுட்டிக்காட்டி நல்லதொரு அறிக்கையினைச் சமர்பித்தனர் (Swami Dayanandar, 2018). அறிக்கைக்குப் பெரிதாக அரசு செவிசாய்க்காமல் ஆசிரமம் கிறிஸ்தவப் பெண்கள் விடுதியுடன் இணைக்கும் முயற்சியினை கைவிட்டு உதவித்தொகையினை குறைத்தனர்.

### ஆசிரமத்தின் எழுச்சியும் அதற்கான அங்கீகாரமும்

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சகோதரியின் அயராத உழைப்பும் வைதவ்யப் பெண்கள் கற்றலில் காட்டிய ஈடுபாடும் ஆசிரமத்திற்குச் சிறந்த பெறுபேற்றைத் தந்தது எனலாம். 1917 ஆம் ஆண்டில் அம்முக்குட்டி, லக்சுமி, பார்வதி ஆகிய மூவரும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் தோற்றி மூவரும் சித்தியெய்தினர். அது ஆசிரமத்தின் முதல் அறுவடை எனலாம். பிற்காலத்தில் இவர்கள் மூவருமே தென்னிந்தியாவில் இருந்த எல்லா வைதவ்யக் குழந்தைகளுக்கும் ஈடிணையில்லாத உத்வேகம் அளித்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். தொடர்ந்து ஆசிரமத்தில் இருந்து கல்வி கற்ற மாணவிகள் பலர் இவ்வாறன நிலையை எய்தியமை சிறப்பான முன்னுதாரணங்களாகும். ஆசிரமத்து மாணவிகள் மருத்துவத்தில் உயர்கல்வியைத் டெல்லியில் பயின்றனர். தாதியராகவும் பாடசாலைப் பொறுப்பாசிரியர்களாகவும், போதனாசிரியர்களாகவும் விளங்கியதோடு தென்னகத்தின் ஏனைய மாநிலங்களுக்கும் பணியாற்ற துணிந்தமை சிறப்பான ஆம்சமாகும்.

பெண்களுக்கான கல்வி நிறுவனங்கள் இல்லாத ஊர்களில் இருந்த செல்வந்தர்களும் தங்களின் மணமாகாத பெண்களையும் சேர்க்க முன்வந்தமை இவ்வாசிரமத்தின் மீதும் சகோதரியின் சேவை மீதும் இருந்த நல்ல அபிப்பிராயத்தை வெளிக்காட்டுகின்றது. இவர்களில் 25 முதல் 30 பெண்கள் வரை சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

தமிழ் நாட்டில் ஆசிரமம் மையம் கொண்டிருந்தாலும் தென்னகத்தின் ஏனைய மாநிலங்களான தெலுங்கு, மலையாளம் முதலிய பிராந்தியங்களில் இருந்து ஆசிரமத்திற்குப் பிள்ளைகள் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்ந்து வெற்றி கண்டமை ஆசிரம எழுச்சியின் முக்கிய திருப்புமுனை எனலாம். பின்னாளில் இராமகிருஷ்ண மிஷன் பள்ளிக் கூடங்கள் தாபிக்கப்பட்ட பின்னர். அதிலும் தமது ஆசிரமக் குழந்தைகளைச் சேர்த்துப் படிப்பிக்கவைத்தார்.

இவ்வாறு சேவையில் பலபரிமாணங்களையும் தொட்ட சகோதரிக்கு அவரது சேவையைப் பாராட்டி பிரித்தானிய அரசு 'கெய்ஸர் - இ - ஹிந்த்' என்னும் பதக்கம் வழங்கி கௌரவித்தது. இக்கௌரவம் இந்தியாவில் ஒரு தமிழருக்குக் கிடைத்த முதல் மரியாதையாகும் (Swami Dayanandar, 2018).

1921ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் தீவிட்டு எரிந்துகொண்டிருந்த வேளையில் 1922ஆம் ஆண்டு பிரித்தானிய இளவரசர் வேல்ஸ் சென்னை வந்திருந்தார், அவருக்கான வரவேற்பிற்காகத் தமது ஆசிரமத்துப் பிள்ளைகளின் கும்மி, கோலாட்டம் முதலிய வரவேற்பு நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தினார். இது பிரித்தானிய அரசு தமது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய உதவிக்கான உபகாரமாகக் கொள்ளமுடியும். இந்தியா எங்கும் தேசிய காங்கிரஸினர் இளவரசருக்கு எதிரான போராட்டம் இடம்பெறும் வேளையில் இவ்வாறன செயற்பாட்டுக்கு யார் துணிவார். பின்னர் இளவரசரைச் சந்திக்கும் பட்டியலில் சகோதரியின் பெயரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இளவரசரைச் சந்தித்த வேளை அவருக்கு இந்திய வழக்கத்தின்படி இருகரம் கூப்பி மரியாதை செலுத்தினார். மாறாக இளவரசரும் இருகரம் கூப்பி மரியாதை செலுத்தியமை அதில் பங்குகொண்டிருந்த அனைவரையும் கவர்ந்தது என்பதை அறியமுடிகின்றது (Swami Dayanandar, 2018).

1953ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் சகோதரியின் உருவப்படத்தை அவர் வாழும் போதே அவரது முன்னிலையில் திறந்து வைத்தமை அவரது சேவைக்கு கிடைத்த வாழ்நாள் அங்கீகாரம் என்றே கூறவேண்டும்.

சகோதரி இவ்வாறுதான் சிரமேற்கொண்டு நடாத்திய ஆசிரமப்பணியின் பொறுப்பை 1932 ஆம் துறந்தார். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பின்னர் தென்னிந்தியாவில் வெவ்வேறு இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு தலைமையாசிரியையாக நியமிக்கப்பட்டார். அதனையும் முழுத்திருப்பியுடன் ஏற்று தமது பணியைச் சிறப்பாகச் செய்த சகோதரி 1969ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதி ஏகாதசி நாளில் அறைபதம் எய்தினார். அவர் விட்டுச் சென்ற பணிகளை அவரது ஆசிரமத்தில் மாணவர்களாக பயின்று தொழில் புரிபவர்கள் பொறுப்பேற்று நடாத்தினர். இதுவே சகோதரியினது சேவையின் தூர நோக்காக இருந்தது.

## முடிவுரை

வைதவ்யப் பெண்களை ஆயுள் முழுவதும் பராமரிக்கும் பொறுப்பைப் பெற்றோருக்குப் பின்னர் உடன் பிறந்தாரும் ஏற்பதில்லை. பெண்களுக்குச் சொத்து உரிமையும் அற்ற சூழலில் அவர்கள் சமுதாயம் உருவாக்கிய ஆதரவற்றோர் ஆனார்கள். இவர்களது எதிர்காலம் கருதியே சகோதரி தமது பயணத்தைத் தொடர்ந்தமை இங்கு புலனாகின்றது. வைதவ்யப் பெண்கள் தொடர்பாக சகோதரி எடுத்துவைத்த அடி ஒவ்வொன்றும் மிக நிதானமானவை என்பதை இனங்காணமுடிகின்றது. அந்நிய ஆட்சியாளர்களின் உதவியுடன் அச்சிரமம் துவங்கப்பட்டாலும் தமது சுதேசியப் பண்பாடுகளுக்கு பங்கம் ஏற்படாத வண்ணமே அவரது செற்பாடுகள் நகர்ந்தன. அந்தணப் பெண்கள் மீதான அதே பார்வைதான் அக்கால சமுதாயத்திற் பிற்படுத்தப்பட்டிருந்த மீனவக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மீதும் சேரியில் வாழ்ந்த குழந்தைகள் மீதும் இருந்தமை சகோதரியை ஒரு புரட்சித்தலைவியாக அடையாளப்படுத்துகின்றது. சமுதாய அடக்கு முறைக்கு மத்தியில் துணிந்து நின்று பணிசெய்த வீரமங்கை. சமுதாயத்தில் காணப்பட்ட வீணான மரபுகளையும், சம்பிரதாயங்களையும் தகர்த்த பகுத்தறிவுவாதி. வைதவ்யப் பெண்களின் மறுமணம் பற்றிய சிந்தனைக்கு அக்கால சமுதாயக்கெடுபிடிகள் இடம் கொடுக்காது என்பதனால் அதன் மீது அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. இருந்த போதிலும் சகோதரி மறுமணத்திற்கு எதிரானவர் அல்ல என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது. அவருக்கு இருந்த பன்மொழியறிவு அவரை ஒரு சிறந்த பெண் ஆளுமையாக அடையாளப்படுத்தியதுடன் பலதுறைசார் அறிவு படைத்தவராகவும் மாற்றியது. ஆட்சி அதிகாரத்தை எதிர்த்தால் தமது பணியினைச் செய்வதற்கு அது இடையூறாக மாறும் என்பதனால் தேசிய உணர்வும், சுதந்திர வேட்கையும் இருந்தும் அமைதியாகப் பணியாற்றியவர். அந்நியரிடம் இருந்து கிடைக்கவிருக்கும் சுதந்திரத்தை பேணிப் பாதுகாக்கவல்ல அறிவுபூர்வமானவர்களை உருவாக்கிய தீர்க்கதரிசி. சமகாலத்தில் தம்முடன் வாழ்ந்த, பணிபுரிந்த சகபாடிகளுடன் முரண்படுகின்ற இயல்பு அவருக்கு இருக்கவில்லை. ஏழைக்குழந்தைகளின் எதிர்காலத்திற்காக அவரால் ஏற்றப்பட்ட ஸ்ரீசாரதா வித்தியாலயா, சாரதா ஆச்சிரமம் என்னும் தீபங்கள் அங்கு பயின்ற அனைத்து பெண்பிள்ளைகளது வாழ்விலும் ஒளி ஏற்றின. ஆரம்பத்தில் இவைகளின் உருவாக்கத்தில் பல முட்டுக்கட்டைகள் இருந்தாலும் காலப்போக்கிலே அவை எல்லாம் விலகின. சமுதாய அங்கீகாரம் பெற்ற தனிமனித நிறுவனமாக சகோதரியை அடையாளம் காணமுடிகின்றது. அவரது சேவையின் பல்பரிமாணத்தன்மை அறிஞர்கள் பலரையும் வியக்க வைத்தது. சுதந்திரத்திற்குப் பின்னராவது இவரைக் கொண்டு தமிழ் நாட்டின் கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டிருக்குமாயின் அது இன்று சர்வதேப் பரிமாணம் பெற்றிருக்கும். தவறியது தமிழ்நாடு. மொழிப் புலமையும் உளவியல் ஞானமுமே கலைத்திட்ட ஆக்கதிற்கு துணை நிற்பவை. உ.வே.சாவிடம் தமிழ் பயின்றவர், ஆங்கிலேயரிடம் மனோத்துவம் பயின்றவர். சகோதரி ஆர்.எஸ்.சுப்புலட்சுமி தாமாகவே தமக்கு சகோதரி என்ற அடையாளத்தை வழங்கயவர். மொத்தத்தில் தமிழகத்தில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் பெண்களின் கல்வி மறுமலர்ச்சியின் முன்னோடியாகவும், சமுதாய சீர்திருத்த செயற்பாட்டாளராகவும் சகோதரி அவர்கள் செயற்பட்டார் என்பது தெளிவு.

## References

Hancock, M.E. (1993) Malathi Ramanathan, Sister RS Subbalakshmi: Social Reformer and Educationist, (Book Review), Social Service Review, 67(1), 168. https://doi.org/10.1086/603973

Karthikeyan, S. (2019) The First Graduate Hindu Women in Madras, Vikatan, Chennai, India

Malathi, R. (1989) Sister R.S Subbulaksmi: Social Reformer and Educationst, Lok Vangmaya Griha Ltd, Bombay, India

Ramanan, P.S. (2021a) R.S. Subbalakshmi Ammal Part -1, Thendral, 21(4).

Ramanan, P.S. (2021b) R.S. Subbalakshmi Ammal Part -2, Thendral, 21(5).

Ramanathan, M. (1994) Widowhood : A Perspective (A Case study of sister R. S. Subbalakshmi and her Widow's home in the Madras Presidency, 1910-1933), Proceedings of the Indian History Congress, 55, 678–686.

Swami Dayanandar, (2018) Sister Subbalakshmi Biography Pioneer of Indian women's progress, Sri Ramakrishna Math, Chennai, India

Swami Vivekanandar, (2017) Indian Womens, Sri Ramakrishna Math, Chennai, India

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Authors 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Gunapalasingam, V., Baskaran, T., Mumthaj Sameem, M.S.J., Sister R.S. Subbalakshmi 's Role in the Renaissance of Hindu Community : A special study based on the Educational standard of Tamil Nadu women in 19th and 20th Centuries, Indian Journal of Tamil, 4(1) (2023) 1-12. https://doi.org/10.54392/ijot2311